# மதுரை மாவட்டம் தேதி:04/02/2026

SRJ

## இரண்டாம் திருப்புதல் தேர்வு – 2026

12 – ஆம் வகுப்பு

**வணிகவியல்**

நேரம் : 3.00 மணி

மதிப்பெண்கள் : 90

---

I அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20X1=20

1. வேலையை பல்வேறு சிறு பணிகளாக பிரிப்பதை _______ என்பர்.
(அ) ஒழுங்கு (ஆ) பயன்பாடு (இ) வேலைப் பகிர்வு (ஈ) சமத்துவம்

2. _______ உதவியால் அதிகாரப் பகிர்வு எளிதாகச் செய்யப்படுகிறது.
(அ) முதுகலை வணிக மேலாண்மை(MBM) (ஆ) விதிவிலக்கு மேலாண்மை(MBE)
(இ) குறியிலக்கு மேலாண்மை(MBO) (ஈ) முதுகலை வணிக நிர்வாகம் (MBA)

3. முதல்நிலைச் சந்தை ---------- எனவும் அழைக்கப்படுகிறது
(அ) இரண்டாம்நிலைச் சந்தை (ஆ) பணச் சந்தை
(இ) புதிய வெளியீடுகளுக்கான சந்தை (ஈ) மறைமுக சந்தை

4. வணிக மாற்றுச்சீட்டுகளை வாங்குவதற்கும் விற்பதற்குமான சந்தை.
(அ) வணிகத்தாள் சந்தை (ஆ) கருவூல இரசீது சந்தை
(இ) வணிக இரசீது சந்தை (ஈ) மூலதனச் சந்தை

5. நம்பிக்கையுள்ள ஊக வணிகர் என்பவர்
(அ) காளை (ஆ) கரடி (இ) மான் (ஈ) வாத்து

6. இந்தியாவில் இந்திய பத்திரங்கள் மற்றும் பரிமாற்ற வாரியம் (SEBI) தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
(அ) 1988 (ஆ) 1992 (இ) 1995 (ஈ) 1998

7. ஆட்சேர்ப்பு என்பது _____________ அடையாளம் காண்பதற்கான செயல்முறை ஆகும்.
(அ) சரியான வேலைக்கு சரியான நபர் (ஆ) நன்கு செயலாக்குபவர்
(இ) சரியான நபர் (ஈ) குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை.

8. தேர்வு பொதுவாக ஒரு ________ செயலாக கருதப்படுகிறது.
(அ) நேர்மறை (ஆ) எதிர்மறை (இ) இயற்கை (ஈ) இவை எதுவும் இல்லை

9. சந்தையிடுகை முறையின் ஆரம்பநிலை____________
(அ) முற்றுரிமை முறை (ஆ) பணத்திற்கு மாற்றுதல்
(இ) பண்டமாற்று முறை (ஈ) தற்சார்பு உற்பத்தி

10. தூய சில்லரை விற்பனையாளர் ________ என அழைக்கப்படுவர்.
(அ) சந்தை உருவாக்குநர்கள் (ஆ) நடவடிக்கை தரகர்கள் (இ) வியாபாரிகள் (ஈ) முகவர்கள்

11. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம் நடைமுறைக்கு வந்த நாள்
(அ) 01.01.1986 (ஆ) 01.04.1986 (இ) 15.04.1987 (ஈ) 15.04.1990

12. மாவட்ட மன்றத்தின் தலைவர் யார்?
(அ) மாவட்ட நீதிபதி (ஆ) உயர் நீதிமன்ற நீதிபதி
(இ) உச்ச நீதிமன்ற நீதிபதி (ஈ) மேலே குறிப்பிடப்பட்ட எதுவும் இல்லை

13. இரண்டு முக்கிய வாணிபச் சூழல்கள்____மற்றும்____ ஆகும்.
(அ) நேர்மறை மற்றும் எதிர்மறை (ஆ) உட்புறச் சூழல் மற்றும் வெளிப்புறச் சூழல்
(இ) நல்லது மற்றும் கெட்டது (ஈ) அனுமதிக்கத்தக்கது மற்றும் அனுமதிக்க முடியாதது

14. ____ புதிய தொழிற்துறைக் கொள்கையின் விளைவாகும், இதனால் உரிமம் முறை அகற்றப்பட்டது.
(அ) உலக மயமாக்கல் (ஆ) தனியார் மயமாக்கல்
(இ) தாராள மயமாக்கல் (ஈ) இவற்றில் எதுவுமே இல்லை

15. பொருளின் மீதான உரிமை என்பது
(அ) பொருளின் உடைமை (ஆ) பொருளைப் பாதுகாத்தல்
(இ) பொருளின் மீதான உரிமை பாத்தியம் வைத்திருப்பவர் (ஈ) இவற்றில் ஏதுமில்லை

16. மாற்று முறை ஆவணச்சட்டம் 1881 பிரிவு 6 எதைப் பற்றி இயம்புகிறது?
(அ) கடனுறுதிச் சீட்டு (ஆ) மாற்றுச் சீட்டு (இ) காசோலை (ஈ) மேற்கூறிய எதுவுமில்லை

17. கூட்டுப்பங்கு நிறும தொழில் முனைவோரின் வேறுபெயர்.
(அ) அகத்தொழில் முனைவோர் (ஆ) தோற்றுவிப்பாளர் (இ) மேலாளர் (ஈ) பங்குநர்

18. அனைத்து இந்திய அரசாங்கங்களும் மின்னணு முறையில் கிடைக்கச் செய்ய, இந்திய பொருளாதாரத்தை நவீன மயமாக்க_______ முன் முயற்சி தொடங்கப்பட்டது.
(அ) ஸ்டாண்ட் அப் இந்தியா (ஆ) ஸ்டாட்டப் இந்தியா
(இ) டிஜிட்டல் இந்தியா (ஈ) இந்தியாவில் தயாரிப்போம் திட்டம்

19. நிறுமச்சட்டப்படி இயக்குநர்கள் ______ மூலம் நியமிக்கப்பட வேண்டும்
(அ) மத்திய அரசு (ஆ) நிறுமச் சட்ட வாரியம்
(இ) நிறுமத்தின் ஆண்டு பொதுக்கூட்டம் (ஈ) இயக்குநர்கள் குழு

20. நிறுமத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் __________ க்கு பேச உரிமை இல்லை.
(அ) தணிக்கையாளர் (ஆ) பங்குநர் (இ) பகராள் (ஈ) இயக்குநர்

II எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண். 30 க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7X2=14

21. மேலாண்மை என்றால் என்ன?
22. உடனடிச் சந்தை என்றால் என்ன?
23. செபி பற்றிய சிறுகுறிப்பு வரைக.
24. பணியமர்த்தல் என்றால் என்ன?
25. சமூக சந்தையிடுகை என்றால் என்ன?
26. வேளாண் தொழில் முனைவோர் என்பவர் யார்?
27. VUCA–ஐ விரிவாக்கம் தருக.
28. செயலர் என்பவர் யார்?
29. வருநிகழ்வுசார் சரக்கு என்றால் என்ன?
30. கலப்படம் என்றால் என்ன?

III எவையேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும்.
வினா எண்.40 க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7X3=21

31. மேலாண்மையின் முதன்மைப் பணிகளை பட்டியலிடுக.
32. ஸ்டாட்டப் இந்தியா என்றால் என்ன?
33. கருவூல இரசீதின் வகைகளை விவரி. (ஏதேனும் 3)
34. காளை மற்றும் கரடி – விளக்குக.
35. ஆட்சேர்ப்பு முறையில் கோரப்படாத விண்ணப்பங்கள் என்றால் என்ன?
36. புதிய பொருளாதார கொள்கை பற்றி ஒரு சிறுகுறிப்பு தருக.
37. சந்தையிடுகையின் நோக்கங்கள் யாவை?
38. மாற்றுச்சீட்டின் சிறப்பு இயல்புகளை கூறுக. (ஏதேனும் 3)
39. தன்னார்வ நுகர்வோர் அமைப்பு பற்றி விவரிக்கவும்.
40. பல்வேறுவகையான முன்னுரிமைப் பங்குகளை சுருக்கமாக கூறுக. (ஏதேனும் 3)

IV அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7X5=35

41. மேலாண்மையின்அடிப்படைக் கருத்துக்களை விவரி. (ஏதேனும் 5). ***(அல்லது)***
காசோலை மற்றும் மாற்றுச்சீட்டினை வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

42. மனித வளத்தின் சிறப்பியல்புகளை விளக்குக. (ஏதேனும் 5) ***(அல்லது)***
நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம், 1986ன் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் 5)

43. பங்குச் சந்தை பணிகளை விவரி? (ஏதேனும் 5) ***(அல்லது)***
குறியிலக்கு மேலாண்மையின் முக்கிய நன்மைகள் யாவை? (ஏதேனும் 5)

44. விற்பனை ஒப்பந்தத்தின் அடிப்படை கூறுகளைக் கூறி விளக்குக. ***(அல்லது)***
ஆட்சேர்ப்பு முறைக்கும் தேர்ந்தெடுத்தலுக்கும் இடையே உள்ள வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5)

45. பொருளாதார அடிப்படையில் சந்தைகள் எவ்வாறு வகைப்படுத்தப்படுகிறது? ***(அல்லது)***
இயக்குநரின் பல்வேறு வகைகளை சுருக்கமாக விவரி. (ஏதேனும் 5)

46. தாராளமயமாக்கல் நன்மைகள் மற்றும் குறைபாடுகள் பற்றி விளக்குக. (ஏதேனும் 5) ***(அல்லது)***
தொழில் முனைவோர் மற்றும் அகத் தொழில் முனைவோர் இவர்களை வேறுபடுத்துக. (ஏதேனும் 5)

47. பணச்சந்தை மற்றும் மூலதனச் சந்தை இரண்டிற்கும் இடையிலான வேறுபாடுகளை விவரி. (ஏதேனும் 5) ***(அல்லது)*** நுகர்வோரின் பொறுப்புகள் யாவை? (ஏதேனும் 5)